தமிழ் நாடு சட்டப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1970 செப்டம்பர் 8.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

Japanese Goodwill Mission

* 289 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether he met a Japanese Goodwill Mission about the 13th November 1969?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: ஆம்.

மதுரை எர்ஸ்கின் மருத்துவமனையில் சுத்திகரிப்பு ஊழியர்கள் வேலை நிறுத்தம்.

* 290 வினா.—திரு. கரு. சீமைச்சாமி: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை எர்ஸ்கின் ஆஸ்பத்திரியில் 15-10-1969-ல் சுத்திகரிப்பு ஊழியர்கள் திடீரென வேலை நிறுத்தம் செய்தார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: ஆம்.

திரு. எம். பூபதி: தலைவர் அவர்களே, மதுரை எர்ஸ்கின் ஆஸ்பத்திரி சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் எக்காரணத்தை முன்னிட்டு வேலைநிறுத்தம் செய்தார்கள்? அவர்களுடைய கோரிக்கைகள் என்ன? அவற்றைத் தீர்ப்ப தற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா? குறைந்த பட்ச வாழ்க்கைக் கேற்ற வசதிகளையாவது இந்த அரசு அவர்களுக்கு அளிக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: துப்புரவுத் தொழிலாளர்கள் கோரிக்கை வைத்துச் செய்யப்பட்ட வேலைநிறுத்தம் அல்ல இது. 14-7-1970 அன்று ஒரு துப்புரவுத் தொழிலாளிக்கு மார்பு வலி ஏற்பட்டது. அவர் காஷுவாலிடி பிரிவில் பணிபுரிந்து வந்தார். உடனே அவர் ஆஸ்பத்திரியில் இருந்து திரு. கே. குமாரசுவாமி என்ற டாக்டரிடம் அனுப்பப்பட்டார். அவரை குமாரசுவாமி வெளியே போ என்று சொல்லித் திட்டியதாக அந்தத் தொழிலாளி குறைபட்டுக்கொண்டு அன்று இரவே 11½ மணிக்குத் தன் கழுத்தைத் தானே அறுத்துக் கொண்டுவிட்டார். உடனே அவர் அறுவைச் சிகிச்சைப் பிரிவுக்கு அனுப்பப்பட்டார். ஆயினும் அவர் அங்கே இறந்துவிட்டகாரணமாக மறுநாள் காலையில் துப்புரவுத் தொழிலாளர்கள் அத்தனைபேரும் வேலைநிறுத்தம் செய்தார்கள். டீன் அவர்கள் தலையிட்டு டாக்டர் கே. குமாரசுவாமியை விசாரித்துத் தக்க நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதி அளித்தவுடன் அத்தனைபேரும் வேலைக்குத் திரும்பிவிட்டார்கள்.